# ஆண்டறிக்கை 2023

ECSL

Ethics Excellence Education

இலங்கைப் பொறியியற் பேரவை

# பொருளடக்கம

நோக்கம் ........ 2
பணிக்கூற்று ........ 2
பொருளடக்கம் ........ 3
குறிப்பு ........ 6
தலைவரின் செய்தி ........ 8
நிறுவனக் கட்டமைப்பு ........ 10
தேர்ச்சி ........ 13
நிதிக் கூற்று ........ 19
தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அறிக்கை ........ 34

## நோக்கம்

இலங்கையில் பொறியியற் தொழிலர்களின் மீதான மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக செயற்பாடுமிக்க பங்காளர் ஆதல்.

## பணிக்கூற்று

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் தேசிய ரீதியில் உரிய தரத் தேர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக தொழில் தொடர்பாக அர்ப்பணித்து சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு இலங்கையில் பொறியியற் தொழிலர்களின் பல்வகைப் பிரிவுகளைப் பதிவு செய்வித்தல்.

## பொருளடக்கம்


### வரலாறு
அறிமுகம்
நிறுவனத் தகவல்கள்

### குறிப்பு
இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் தேசிய ரீதியான பொறுப்பு

**இலங்கை பொறியியல் கவுன்சிலின் பார்வை மற்றும் பணி**

இலங்கைப் பொறியியற் பேரவையின் செயற்பாடுகள்

பொறியியல் தொழில் முனைவர்கள் உரித்தான வகுதிகள் மற்றும் தகைமைகளை அடையாளம் காணுதல்

### தலைவரின் செய்தி

### நிறுவனக் கட்டமைப்பு
பேரவை and பேரவையின் அங்கத்தவர்கள் தொடர்பான சிறு குறிப்பு
பணிக் குழு

### முடிக்கப்பட்ட மற்றும் நடந்து வரும் பணிகள்

பணிகள் முடிந்தது

- கவுன்சில் கூட்டங்கள்
- பொறியியற் தொழில் முனைவர்களை பதிவு செய்தல்
- சான்றிதழ் வழங்குதல்
- தரவுத்தளத்தை மேம்படுத்துதல்
- வலைத்தளத்தை புதுப்பிக்கவும்
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- பிற நிறுவனங்களுடனான சந்திப்புகள்

தற்போதைய பணிகள் நடைபெற்று வருகின்றன

- மீதமுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரித்தல்
- பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர் பதிவுக்கான செயல்முறை தயாரித்தல்

**நிதிக் கூற்றுக்கள்**

**கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை**


**அறிமுகம்**

2017 மார்ச் மாதம் 10ஆம் திகதிய இலங்கை சோஷலிய ஜனநாயக குடியரசின் வர்த்தமானியின் ii ஆம் பிரிவிற்கு மேலதிகமாக வெளியிடப்படும் 2017 ஆண்டு 04ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவை சட்டம் இலங்கை பொயியற் பேரவை (ECSL) நிறுவப்பட்டுள்ளது.

## இந்த சட்டத்தின் மூலம்

- பொறியியற் தொழிலர்களின் தொழில் ரீதியான நிலைமை மற்றும் நடத்தையை முன்னெடுக்கும் மற்றும் செயற்படுத்தும் பொறுப்பிற்கும்
- பொறியியற் தொழிலர்களை பதிவு செய்வதற்கும்
- அது தொடர்பான விடயங்கள் அல்லது அதற்கு அமைவான விடயங்கள் தொடர்பாக வழிமுறைகளை திட்டமிடுவதற்கும் இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது.

## பொறியியற் தொழிலர்களைப் பதிவு செய்தல்

சட்டத்திற்கு அமைவாக அனைத்து பொறியியற் தொழிலர்களும் இலங்கை பொறியியற் பேவையில் பதிவு செய்தல் வேண்டும். சட்டத்தின் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப பொறியியற் தொழிலர்களுக்கு உரிய பிரிவுகள்

- பட்டயப் பொறியியலாளர்
- அண்மைய பொறியியலாளர்
- இணைப் பொறியியலாளர்
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்
- பொறியியற் டிப்ளோமாதாரிகள்
- பொறியியற் தொழில்நுட்பவியலாளர்

இலங்கையினுள் பணியில் ஈடுபடும் வெளிநாட்டு பொறியியல் தொழிலர்கள் நான்கு மாத கால எல்லைக்கு தற்காலிக பதிவு செய்யும் நடவடிக்கையை இலங்கை பொறியியலாளர் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த பதிவுக் கால எல்லை முடிவில் மீண்டும் அப்பதிவைப் புதுப்பிக்க முடியும.

**நிறுவனத் தகவல்கள்**

**<u>அமைப்பின் பெயர்</u>**

இலங்கைப் பொறியியற் பேரவை

**<u>சட்ட ரீதியான நிலைமை</u>**

அரசிற்கு சொந்தமான நிறுவனமாகும்

**<u>நிறுவப்பட்ட வருடம்</u>**

2017இலக்கம் 04 பாராளுமன்ற சட்டத்தின் மூலம் 2017ஆம் ஆண்டில்

**<u>சமாந்தர அமைச்சு</u>**

நீர்வழங்கல் அமைச்சு

**<u>ஆரம்பித்த வருடம்</u>**

2018 ஆகஸ்ட் 24

**<u>சட்ட ஆலோசனை</u>**

வழக்கறிஞர் இ.ஏ.ஜே.சி.கே. எதிரிசிங்க

**<u>தலைமைக் காரியாலயம்</u>**

4 வது மாடி நீர்வழங்கல் வளாகம்
230, பொத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி இல. 0112588811
மின்னஞ்சல் registrar@ecsl.gov.lk
வலைத்தளம் www.ecsl.gov.lk

**வங்கியாளர்**

இலங்கை வங்கி

**வரியை அறிந்து கொள்ளும் இலக்கம்**

10276922802192003

**சட்டத்திற்கு ஏற்ப பங்காளிகள்**

இலங்கைப் பொறியியற் பேரவை
இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம்
மூன்றாம் நிலை மற்றும் கல்வி ஆணைக்குழு
பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு

குறிப்பு

## இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் அதன் தேசிய பொறுப்பு

இலங்கைப் பொறியியற் பேரவையை நிறுவுதல் தாய்நாட்டின் கௌரவத்திற்குறிய பொறியியற் தொழில் தொடர்பாக முன்பைவிட அதிகளவான பங்களிப்பை வழங்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தல் விஷேடமானத் திருப்பு முனையாகக் காணப்பட்டது. அது வரலாற்றுக்கு முந்திய பகுதியைச் சேர்ந்த பல நூற்றாண்டு வரையான பரந்துபட்ட தெளிவான நிதியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நீண்ட காலமாக உலக முழுதும் பொறியியற் தொழிலின் சமகால சமாந்தர நிலையிலான குறிக்கோள்களை ஏனைய தேசத்தவர்களும் பயன்படுத்தும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் பிரதிநிதித்துவ தேசிய நிறுவனம் ஒன்றை நிறுவுவதன் தேசிய தேவைப்பாடு தொடர்பாக நினைவுபடுத்தி இலங்கை பொறியியற் தொழில் தொடர்பான முழுமையான அவதானிப்பினை மேற்கொண்ட வண்ணமேயுள்ளது.

பங்காளிகளுக்கிடையில் மற்றும் தேசிய தலைமைத்துவத்துடன் நீண்ட கால கலந்துரையாடல் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது ஆட்சி செய்த அரசுகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற சிறந்த அனுசரனையுடனான ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் எல்லாம் இறுதியில் 2017ஆம் வருடத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் தேவையான சட்ட அதிகாரம் வழங்குதல் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு நிறுவப்பட்ட இலங்கை பொறியியற் பேரவை பொறியியற் தொழிலை கண்காணிப்பதற்காக மேலான நிறுவனமாக கொள்ளப்பட்டு தேசிய தலைமைத்துவத்தை வழங்கும் உயரிய பொறுப்பினை அன்று முதற்கொண்டே ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக குறிப்பிடுவோமெனின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுதிகளுடைய பொறியியற் தொழிலர்களை பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளல் அந்த தொழிற் துறையினரின் ஏதாவது ஒழுங்கீன செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளல் மற்றும் இலங்கையினுள்ளே பொறியியற் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு உரிய காரணங்கள் தொடர்பாக அரசு மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதித்துவங்கள் செய்வதற்காக அந்த நிறுவனத்திற்கு சட்டரீதியான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைப் பொறியியற் பேரவையின் பணிகள்

கீழ்வரும் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

- பொறியியற் தொழிலர்களின் தொழிற்தன்மையை நடாத்திச் செல்லுதல்.
- பொறியியற் தொழிலர்களின் தொழில் நடத்தைகளைப் நடாத்திச் செல்லுதல்.
- பொறியியற் தொழிலர்களை 06 பிரிவுகளின் கீழ் பதிவு செய்தல்.
- இலங்கையினுள் பொறியியற் தொழிலை முன்னெடுப்பதற்கு உரிய காரணங்கள் தொடர்பாக அரசு மற்றும் உரிய நிறுவனங்களின் பிரதிநிதித்துவங்களை செய்தல்.
- பொறியியற் தொழிலர்களின் பதிவு அட்டவணையைப் பேணிச் செல்லுதல்.
- பதிவு செய்யப்பட்ட பொறியியற் தொழிலர்களின் பட்டியலை இடை இடையே வெளியிடல்.
- பொறியியற் தொழிலர்களின் தொழிற்சார்ந்த ஒழுக்க செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்தல்.
- பேரவையின் பணிக்குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய வேதனங்களை நிர்ணயம் செய்தல்.
- பதிவு செய்தல் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயம் செய்தல்.
- பதிவுச் சான்றிதழை வழங்குதல்.
- பொறியியற் தொழிலர்களின் தர நிலையை மேம்பாடு அடையச் செய்வதற்கு தேவையான வேறு ஏதாவது காரணங்கள்
- அது தொடர்பான அல்லது அதற்குச் சமமான காரணங்கள் தொடர்பாக வழிமுறைகளை வழங்குதல்.

## பொறியியற் தொழிலர்களுக்கு உரிய வகுதிகள் மற்றும் தகைமைகள்

(**2017** இலக்கம் 4 பொறியியலாளர் பேரவை சட்ட மூலத்தின் 15 பிரிவின் 'அ' அட்டவணையின்படி)

### பட்டயப் பொறியியலாளர்

1968 இலக்கம் 17 இலங்கை பொறியியலாளர் நிறுவன சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் பட்டய பொறியியலாளராக இருத்தல்.

### அண்மைய பொறியியலாளர்

1968 இலக்கம் 17 இலங்கை பொறியியலாளர் நிறுவன சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நான்கு வருட முழுமையான கால பொறியியற் பட்டம் அல்லது 1968 இலக்கம் 17 இலங்கை பொறியியலாளர் நிறுவன சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அண்மைய உறுப்பினராக இருத்தல்.

### இணைப் பொறியியலாளர்

1968 இலக்கம் 17 இலங்கை பொறியியலாளர் நிறுவன சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மூலம் அங்கீகாரம் பெற்ற மூன்று வருட கால முழுமையான பொறியியற் பட்டத்தை பெற்றிருத்தல்.

### கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்

1968 இலக்கம் 17 இலங்கை பொறியியலாளர் நிறுவன சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராக இருத்தல்.

### பொறியியற் டிப்ளோமாதாரி

1992 இலக்கம் 64 இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்களின் நிறுவன(கூட்டிணைத்தல் செய்தல்) சட்டத்தின் மூலம் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் அல்லது தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் பொறியியல் டிப்ளோமாவைப் பெற்றுக் கொள்ளல்.

### பொறியியற் தொழில்நுட்பவியலாளர்

(i) 1990ஆம் ஆண்டின் இலக்கம் 20 மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப பொறியியலாளர் iv வது தகைமை மட்டம் தேசிய தொழிற் தகைமை (NVQ Level 4) அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

பொறியியற் தொழில்நுட்பக் கல்வி தொடர்பாக ஓராண்டு முழு நேர கற்கை பாடநெறி ஒன்றினை நிறைவு செய்திருத்தல் மற்றும் உரிய துறையில் ஒரு வருட அனுபவம் கொண்டிருத்தல் அல்லது இலங்கை அரச பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்க கல்லூரி நிறுவமொன்றில் தொழில்நுட்பக் கல்வி தொடர்பாக டிப்ளோமா அல்லது சான்றிதழ் பெற்றவராக இருத்தல

## *தலைவரின் செய்தி*



### திரு. திலக் டி சில்வா

*BSc Eng., MSc, CEng(SL), CEng(UK), CITP(UK), FIE(SL), FIET(UK), FBCS(UK), SMIEEE(USA),MCS(SL)*

பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த வருடமாக கவனத்திற் கொள்ள முடியும். நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக அதலிருந்து கரையேறுவதற்காக அரசினால் பல்வேறு கட்டுப்பாடுகள் செயற்பட்ட போதிலும், அந்த கடும் தடைகளுக்கு மத்தியிலும் எமது நிறுவனம் கவனத்திற் கொள்ளத்தக்க முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளமை எமது நிறுவனத்தின் பாரிய வெற்றி என்பதனைக் கவனத்திற் கொள்ள முடியும்

எமது சட்டமூலத்திற்கு அமைவாக வெளிநாட்டு பொறியியற் தொழிலர்கள் இலங்கையில் கடமை மேற்கொள்ளும் போது இலங்கைப் பொறியியற் பேரவையில் பதிவினைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமானதாகும். இருந்தும் இது பயன்பாட்டில் செயற்படுத்தும் போது பாரிய முரண்பாடுகளுக்கு முகங் கொடுக்க நேரிட்டது. இது தொடர்பாக பல வருடங்களாக பரந்த ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் அந்த செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முடிந்துள்ளமை எமது பாரிய வெற்றியாகக் கொள்ள முடியும். இங்கு ஆரம்ப கட்டமாக இலங்கை முதலீட்டு சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி 2023ஆம் வருடத்தில் இருந்து அவர்களுடன் தொடர்பான கம்பனிகளின் பொறியியற் தொழிலர்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் இலங்கையில் கடமைப் புரியும் அனைத்து வெளிநாட்டு தொழிலர்கள் தொடர்பாக செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இச் செயற்பாட்டினை வெற்றிகரமாக செயற்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு பொறியியற் தொழிலர்களின் சேவைகள் மிகவும் பயன்தரு வகையில் பெற்றுக் கொள்ள முடியும் என்ற வகையில் எமது பொறியியற் தொழிலர்களும் அவர்களுடன் இணைந்து கடமைப் புரிவதனால் அவர்களுக்கும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகள் தொடர்பாக அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாவதோடு அந்த அறிவு நாட்டின் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதற்கு மேலதிகமாக பொறியியற் தொழில்நுட்பக் கலைஞர்களின் தரம் மற்றும் அவர்களுக்கு சமூகத்தில் மதிப்பினை அதிகரித்துக் கொள்வதற்காக தேவையான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. இது பாரிய பொறுப்பு என்பதோடு இதன் ஆரம்ப கட்டமாக மின்சார தொழில்நுட்பவியலாளர்களைத் தெரிவு செய்து அவர்களின் தரத்தை அதிகரிப்பதற்காக தேவையான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இலங்கைப் பொறியியற் பேரவையின் வழிகாட்டலின் கீழ் மின்சார தொழில்நுட்பவியலாளர்களின் கூட்டிணைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் அறிவினை அதிகரித்துக் கொள்வதற்கும் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்கும் தேவையான அடித்தளம் இடப்பட்டது. இந்த செயற்பாட்டில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவும், பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவும் வழங்கிய ஒத்துழைப்பினை பெரிதாகக் கருதுகிறேன். இதனை அரச நிறுவனம் ஒனறிணைந்து மற்றும் ஒத்துழைப்புடன் சேவையாற்றும் போது மிகவும் நல்ல பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள முடிவதான சிறந்த உதாரணாகும்.

இதற்கு மேலதிகமாக எமது நிறவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் மேலும் பல்வேறு நடவடிக்கைகள் இருக்கின்றதோடு அது தொடர்பாக எமது இந்த வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிவரும் காலங்களில் பொறியியற் துறையில் தரத்தை உயர்த்துதல், புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் பொறியியற் தொழிலர்கள் நாட்டின் அபிவிருத்தித் தொடர்பாக பயன்தரு வகையில் பயன்படுத்துதல் தொடர்பாக எமது கவனம் கொள்ளப்படும்.

இறுதியாக இந்த அனைத்து விடயங்களும் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக எனக்கு ஒத்துழைப்பு நல்கிய பொறியியற் பேரவையின் அங்கத்தவர்களுக்கும் மற்றும் அதன் பணிக்குழுவினர்க்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன.

**திலக் டி சில்வா**
தவிசாளர்
இலங்கைப் பொறியியற் பெரவை

***

# நிறுவனக் கட்டமைப்பு




***சபைக் கூட்டங்கள்***

*கவுன்சில் கூட்டம் நடைபெற்ற தேதிகள்:*

1. 20 ஜனவரி 2023
2. 17 பிப்ரவரி 2023
3. 17 மார்ச் 2023
4. 21 ஏப்ரல் 2023
5. 19 மே 2023
6. 19 ஜூன் 2023
7. 21 ஜூலை 2023
8. 18 ஆகஸ்ட் 2023
9. 15 செப்டம்பர் 2023
10. 20 அக்டோபர் 2023
11. 17 நவம்பர் 2023
12. 15 டிசம்பர் 2023

## அமைப்பு வியூகம்.

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதான நிறைவெற்று உத்தியோகத்தர் | 01 |
| 2 | தலைமைக் குமாஸ்த்தா | 01 |
| 3 | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 4 | கணக்காளர் | 01 |
| 5 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 6 | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 7 | தனியாள் உதவியாளர் | 01 |
| 8 | காரியாலய உதவியாளர் | 01 |

**பேரவை மற்றும் பேரவை அங்கத்தவர்கள் தொடர்பான சிறு குறிப்பு**

பேரவை 17 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதோடு அவர்களில் 04 பேர் பதவி ரீதியாக( பேராசிரியர் பதவிக்கு கீழமையாத பொறியியற் பீடங்களின் பீடாதிபதிகள் மூன்று பேர் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம) நியமிக்கப்படும் அங்கத்தவர்களாவதோடு மேலும் 13 அங்கத்தவர்கள் இலங்கை பொறியியற் பேரவைக்கு உரிய சமாந்தர அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

"நியமிக்கப்படும் அங்கத்தவ்ரகள்" ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இலங்கைப் பொறியியற் பேரவையின் மூலம் பெயர்க் குறிப்பிடப்படும் பல்வேறு பொறியியற் துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஏழு பட்டய பொறியியலாளர்களினாலும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பெயர்க் குறிப்பிடப்படும் பல்வேறு பொறியியற் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 04 அங்கத்தவர்களும் இலங்கை பொறியியற் சேவை டூலமாக பெயர்க் குறிப்பிடப்படும் பட்டயப் பொறியியலாளர் ஒருவரும் மற்றும் முன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் பெயர்க் குறிப்பிடப்படும் இபாறியியற் தொழில்நுட்பவியலாளர்களுள் ஒருவரினாலும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

ஆமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவருக்கிடையே பட்டய பொறியியலாளர் ஒருவர் இலங்கை பொறியியற் பேரவையின் தலைவராக நியமிக்கப்படுவார். 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்ட பேரவையின் அங்கத்தவர்கள் கீழ்வருமாறு.

**பேரவையின் அங்கத்தவர்கள் - 2023 ஆம் ஆண்டு**

- திரு.திலக் த சில்வா தலைவர்
  *BSc Eng., MSc, CEng (SL), CEng (UK), CITP (UK), FIE (SL), FIET (UK), FBCS (UK), SMIEEE (USA),MCS (SL)*

- மருத்துவர். ஆனந்த ரணசிங்க உறுப்பினர்
  *BSc, MTech, MEng, LLM (Colombo) LLM (Wales), PhD, CEng, FIStructE (UK), FICE (UK), FIE (SL), FSSE, FCIArb, Attorney at Law*

- பேராசிரியர் யூ.பி.நவகமுவ உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BScEng.Hons, MEng (AIT), DrEng (YNU), CEng, FIE (SL)*

- பேராசிரியர் டி.ஏ.ஆர். டோலேஜ் உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc Eng , MSc , MA, MBA , DBA , CEng FIE (SL)*

- திரு.எம்.என்.சி.சமரவிக்ரம உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc. Eng. (Hons), MSc, MBA-MOT FIE (SL), CEng, IntPE (SL), MGS (SL), MSLGS, MSLAAS*

- திரு.பி.டபிள்யூ.சரத் உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc Eng , CEng, FIE (SL), SMIEEE*

- திரு.எச்.எஸ்.சுரன் பெர்னாண்டோ உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc (Hons) Eng, CEng, MIESL, GREENAP (SL)*

- கலாநிதி டீ.ஏ.ஜி.குணசேகர உறுப்பினர்
  *M Eng, MSc Eng (Hons), PhD,CEng,IEng, MIE (SL), FIIE (SL)*

- திரு.பி.ஏ.டி.ஆர்.சந்திரசிறி உறுப்பினர்
  *GCGI (UK), FIIESL, Ieng*

- கலாநிதி டபிள்யு.பி.எம்.தொரதெனிய உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *PhD, FIIESL, AMIESL, Ieng*

- திரு.ஜே.ஏ.திஸ்ஸ செனவிரத்ன உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BIS (Hons), MSc, MBA WUSL, MIET, FIIESL*

- திரு.டபிள்யு.எம்.யு.புஸ்ப குமார உறுப்பினர் (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc Eng., CEng, MIE (SL)*

- திரு.எஸ்.யு.கே.ரூபசிங்க உறுப்பினர்
  *PGDBM, PGCTM, AMIE (SL)*

- பேராசிரியர் கே.எம்.டி.யு ஹேமபால உறுப்பினர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தால்) (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc Eng (Hons), PhD, CEng*

- பேராசிரியர் யூ.ஐ.திசாநாயக்க உறுப்பினர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தால்) (28 அக்டோபர் 2022 முதல்)
  *BSc Eng, PhD (Sheffield), CEng, MIE (SL), MSSE (SL)*

- கலாநிதி க. பிரபாகரன் உறுப்பினர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தால்)
  *BSc.Eng, MEng, DEng, CEng, MIEEE, MIET*

- கலாநிதி கே.ஏ.லலிததீரா உறுப்பினர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தால்) (28 அக்டோபர் 2022 முதல்)
  *PhD (Economics), MA (Economics), BA Special (Economics), FCPM*

# தேர்ச்சி

2023 வருடத்தின் தேர்ச்சி

**01. பதிவு செய்தல்**

(i) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்

இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் இலங்கைப் பொறியியற் பேரவையில் நிறுவனத்தின் அங்கத்தவர்களைப் பதிவு செய்யும் தேர்ச்சியானது 77% மற்றும் 71% ஆகப் பதிவாகியுள்ளது. இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களின் பதிவினை அதிகரிப்பதற்காக கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது.

- இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் எல்லா அங்கத்தவர்களுக்கும் நிச்சயிக்கப்பட்ட நாட்களில் பதிவு செய்தலைக் குறிக்கும் நினைவுப் படுத்தும் மின்னஞ்சல் தகவல் அனுப்பப் பட்டுள்ளது.
- இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் எல்லா அங்கத்தவர்களுக்கும் பதிவு செய்வதற்காக நினைவுப் படுத்தல் குறுஞ் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.
- இலங்கைப் பொறியியல் நிறுவனம் மூலமும் இலங்கைப் பொறியியற்பேரவையில் பதிவு செய்யுமாறு தெரிவித்து சுயமாக அங்கத்தவர்களுக்கு மின்னஞ்சல் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.
- பதிவு செய்வதற்கான அனுமதி அதிகரிப்பதற்காக பல்வேறு பொறியியல் அமைப்புக்களுடன் தொடர்பு பட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

இலங்கைப் பொறியியற் பேரவையில் சுயமான பொறியியலாளர்கள் பதிவு செய்தலின் முக்கியத்துவத்தை அவதானிப்பதற்காக அனேக பொறியியல் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப அந்த பொறியியல் நிறுவனத்தின் மூலம் சுயமான பொறியியலாளர்கள் பதிவு செய்தலை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களாக இல்லாத பொறியியலாளர்கள் பதிவு செய்தலில் எதிர்நோக்கும் சவால்கள்**

இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர் அல்லாத பொறியியலாளர்களைப் பதிவு செய்தலின் சவால்களுக்கு தீர்வினை காண்பதற்காக இலங்கைப் பொறியியல் நிறுவனத்துடன் பேச்சு வார்த்தைகள் பாரியளவில் நடத்தப்பட்டுள்ளன. இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர் அல்லாத பொறியியலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் அது தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பாக ஒன்றிணைந்த பிரயத்தனங்களை வெளிப்படுத்தற்கான இந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

- **அரச சேவையின் பொறியியலாளர்களைப் பதிவு செய்தல்**

அரச சேவையின் பொறியியலாளர்களைப் பதிவு செய்வதற்கான பதிவு செய்யும் செயற்பாடுகள் முன்னேற்றுவதனை நோக்கமாகக் கொண்டு பொறியியற் சேவை சபையின் (ESB) பணிப்பாளருடனான கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெறுபேறுகள்:- அரச சேவையில் பதிவாகியிருக்கும் பொறியியலாளர்களுக்க உரிய தகவல்களைச் சேகரிப்பதற்காக பொறியியற் சேவை பேரவையின் பணிப்பாளரின் மூலம் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த தகவல்களை சேகரிப்பதன் மூலம் மற்றும் இலங்கைப் பொறியியற் பேரவையில் பதிவுசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு முறைப்படுத்தலுக்காக பொருத்தமான செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

**(ii). இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்.**

2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் இலங்கைப் பொறியியல் நிறுவனத்தில் இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களைப் பதிவு செய்தலின் தேர்ச்சி 17%, 26% மற்றும் 23% என்ற ஒழுங்கில் வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட

பொறியியல் நிறுவனத்தின் அனைத்து அங்கத்தவர்களும் பதிவாதலை உயர்த்துவதற்காக கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

- இலங்கை ஒன்றிணைக்கப்பட்டப் பொறியியல் நிறுவனம் அனைத்து அங்கத்தவர்களையும் குறிபிட்ட ஒருநாளில் பதிவு செய்வதற்காக நினைவுப் படுத்தல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது.
- இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் எல்லா அங்கத்தவர்களையும் பதிவு செய்ய நினைவு படுத்தல் குறுஞ் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.
- இலங்கைப் பொறியியற் பேரவையில் சுயமான பொறியியலாளர்கள் பதிவு செய்தலின் முக்கியதம்துவத்தை வெளிப்படுத்துவதற்காக அதிகளவான பொறியியல் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக பொறியியலாளர்களை அறிவுருத்தலை முன்னேற்றுவதற்கு அவர்களின் பதிவுகளுக்கான வசதிகளை வழங்குதலை இலக்காகக் கொண்டு உள்ளக வேலைத்திட்டங்களைப் ஆரம்பிப்பதற்கு இந்த பேச்சு வார்த்தை காரணமாகியுள்ளது.

**இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தில் அங்கத்தவர்களல்லாதவர்களை பதிவு செய்தலில் உள்ள சவால்கள்.**

இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவர்களல்லாதவர்களைப் பதிவ செய்தலில் காணப்படும் சவால்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட பொறிறயியல் நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### (iii). பொறியியற் தொழில்நுட்ப கலைஞர்களைப் பதிவு செய்தல்

பொறியியற் தொழில்நுட்ப கலைஞர்களைப் பதிவு செய்தவதற்கு முன்னர்
இவர்களின் தரத் தன்மையை உண்மையாக்குவதற்காக இலங்கைப் பொறியியற் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினைக் காட்டி இலங்கைப் பொறியியற் பேரவையில் பொறியியற் தொழில்நுட்பக் கலைஞர்கள் நேரடியாகவே பதிவு செய்யப்படுவர். மக்கள் தொடர்பாக உள்ள இலங்கைப் பொறியியற்பேரவையின் பொறுப்ப இந்த தரத்தை உறுதிப்படுத்தும் போது தரங்கணிப்பு மூலம் அவதானிக்கப்படும். தொழில்நுட்ப கலைஞர்களுக்கு, அவர்களுக்கு சமாந்தர தொழிலர்களான இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மற்றும் இலங்கை ஒனறிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் தொழிலர்களைப் போன்றே, தரம் பாதுகாப்பு செய்தல் வசதிகளை செய்வதற்கு தொடர்ந்து தொழில் அபிவிருத்தி நோக்கிய வசதிகளை வழங்குவதற்கு தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக சங்கம் ஒன்று இல்லை.

அதேபோன்று பொறியியல் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு மேலும் கவனமாக முடிந்த மற்றும் நிர்வாகச் சுமையை குறைப்பதற்காக பதிவு செய்தல் மற்றும் புதிய செயற்பாடுகளை முறைப்படுத்தல் அத்தியாவசியம் ஆகும். இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு இலங்கைப் பொறியியல் நிறுவனம் மூலம் விடயங்களுக்கு விடையைப் பெற்றுக் கொடுப்பதற்காக விஷேட செயற்பாடுகள் பயன்தரு வகையில் செயற்படுத்தப்படுகிறது.

- பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பாக இலகுபடுத்தப்படும் செயற்பாடொன்று தயாரிக்கப்படுகின்றது.
- பதிவுக் கட்டணம் எந்த தடைகளும் இன்றி இலகுவாக செயவதற்காக கொடுப்பனவு வாயிலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- மின்சார தொழில்நுட்ப கலைஞர்களைப் பதிவு செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.
- மின்சார தொழில்நுட்ப கலைஞர்களின் தரப்படுத்தப்பட்ட நிலைமை மற்றும் அறிவினை முன்னேற்றி சமூகத்தில் மதிப்பினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இலங்கைப் பொறியியற் பேரயின் வழிகாட்டலின் கீழ் தொழிற் சங்கம் என்ற வகையில் மின்சார தொழில்நுட்ப கலைஞர்களின் ஒருங்கிணைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.
- 2030 ஜனவரி 1ஆம் திகதியாகும் போது கட்டாய பதிவு செய்தல் தொடர்பாக மின்சார தொழில்நுட்ப கலைஞர்களுக்கு குறிப்பிட்ட கால எல்லை ஒன்றை வழங்கி பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

- மின்சார தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு சுயமாக NVQ 4 தகைமைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக துணைபுரிவதற்கு இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுடன்(PUCSL) இணைந்து வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- சுய மின்சார தொழில்நுட்ப நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளல் தொடர்பாக 2030 ஜனவரி 1ஆம் திகதி ஆகும் போது மின்சார தொழில்நுட்பக் கலைஞர்களின் கட்டாயமான பதிவினை மேற்கொள்ளல் தொடர்பாக இலங்கை மின்சார சபை (CEB), இலங்கை மின்சார சபை(LECO) மற்றும் நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி சபை (CIDA) ஆகிய நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- நிறுவன மட்டத்தில் பொறியியல் மின்சார கலைஞர்கள் பாரியளவில் பதிவு செய்தல் கீழ்க் குறிப்பிடப்படும் நிறுவனங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம்
இலங்கைக் கடற்படை
இலங்கை விமானப் படை (SLAF)
இலங்கை மின்சாரக் கம்பனி (LECO)
இலங்கை மின்சார சபை (CEB)
இலங்கை டெலிகொம் (SLT)

- மோட்டார் வாகன தொழில் நுட்பக் கலைஞர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக இலங்கை மோட்டார் வாகன பொறியியல் நிறுவனம் (IAESL) மற்றும் இலங்கை மோட்டார் வாகன கைத்தொழிற் சபை (AIC) தொடர்பாக தற்போதும் பேச்சுவார்த்தை நடந்த கொண்டிருக்கிறது.

(iv) வெளிநாட்டு பொறியியல் தொழிலர்களைப் பதிவு செய்தல்

நிறுவப்பட்டிருக்கும் தரத்துடன் வெளிநாட்டு பொறியியற் தொலிழர்களின் தகைமைகளை வரிசைப்படுத்தல் முடியாமை ஆகையால் அவர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் கடினமான சவாலாகும். அதன் பெறுபேறாக, நீண்ட கால பேச்சுவார்த்தைகளின் பின்னர், பதிவு செய்தல் விஷேடமான மூன்று வகுதிகளில் வியூகமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- முதலீட்டு சபையின் (BOI) இணைந்த கம்பனிகளுள் பதிவு செய்தல்
- முதலீட்டு சபையின் (BOI) விடயத்திற்கு வெளியே வேலைத்திட்டங்கள் தொடர்பாக பதிவு செய்தல்
- வேறு வெளிநாட்டு பொறியியற் தொழிலர்கள் தொடர்பாக பதிவு செய்தல்.

முதலீட்டு சபையுடன் (BOI) ஒரு வருட கால பேச்சு வார்த்தையின் பின்னர், முதலீட்டு சபையில் (BOI) பதிவு செய்த கம்பனிகளில் வெளிநாட்டு பொறியியலாளர்கள் பதிவு செய்தல் 2023 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, இந்த செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்குதற்காக பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- முதலீட்டு சபை கம்பனிகளில் வெளிநாட்டு பொறியியற் தொழிலர்கள் பதிவுசெய்வதற்காக முறைப்படுத்தப்பட்ட செயற்பாட்டு முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- வேளிநாட்டு பொறியியல் தொழிலர்களின் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான கணிப்பீடு தொடர்பாக விஷேட குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.
- அதன் செய்றபாடுகளை பிழையற செய்வதற்கு மற்றும் இரண்டாம் கட்டம் மற்றும் மூன்றாம் கட்டம் செயற்படுதல் மேற்பார்வை செய்தலோடு நடைபெறும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் தொடர்பாக அதிகாரத்துடனான விஷேட குழு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

**02. போறியியற் தொழிலர்கள் தொடர்பான ஒழுக்காற்று செயற்பாடுகள்**

2023 வருடத்தில் கீழ் காணப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(i) இலக்கம் 2319/17 மேன்முறையீட்டு சபையை வரத்தமானியில் வெளியிட ஏற்படுத்தல். திகதி: 2023 பெப்ரவரி 14

(ii) 2319/36 தொழில் முரண்பாடு தொடர்பான வர்த்தமானி. திகதி: 2023 பெரவரி 14

(iii) இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் அரச சேவை ஆணைக்குழுவிற்கு இடையே பொறுப்புக் கூறல் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளுக்கு வழி சமைத்து அரச சேவைப் பொறியியலாளர்களுக்கு உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக அரச சேவை ஆணைக்குழு(PSC) நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிட்டுள்ளது. 2023 ஒக்டோபர் 11 ஆம் திகதி அரச சேவை ஆணைக்குழுவுடன் கூட்டம் ஒன்று நடாத்தியதோடு அவர்கள் இந்த முரண்பாட்டை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஏற்றுக் கொள்கிறார்கள். எதிர்வரும் பேச்சு வார்த்தைகளில் இந்த தலைப்பு தொடர்பாக மேலும் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv) ஒழுக்காற்று செயற்பாடுகள் தொடர்பாக வியூகப்படுத்தப்பட்ட நிர்வாக முறைமை ஒன்று தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. நிகழ்காலத்தில் ஒழுககாற்று முரண்பாடுகள் தனித் தனியாக ஒவ்வொரு சம்பவத்தையும் அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவம் செய்யப்படும்.

(v) பட்டயப் பொறியியலாளர்கள் பதிவு செய்யப்படுதல் கட்டாயத் தேவையாக குறிப்பிட்டு பத்திரிகைகள் மூலம் பொது அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

03. **அரச வர்த்தகத் திணைக்களம் (PED) அட்டவணைக்கு மாற்றுதல்**

இலங்கைப் பொறியியற் பேரவையின் தரங்கணிப்புத் தொடர்பாக விளக்கமான கணிப்பீடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. 2023.07.24 திகதி நடந்த அமைச்சரவை தீர்மானங்களின்படி, இலங்கைப் பொறியியற் பேரவை மூலம் அதன் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பேரவை மூலமே நிதிப்படுத்தல் செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த கட்டளைக்கு அமைவாக இலங்கைப் பொறியியற் பேரவைக்காக நிதி சுவாதீனம் மற்றும் பேண்தகு தன்மையை நோக்கிய உபாய மார்க்கமான நுழைவொன்றை உறுதிப்படுத்தி அரச வர்த்தகத் திணைக்களத்திற்காக (PED) மேற்பார்வைப் பட்டியலுக்கு இலங்கைப் பொறியியற் பேரவையை மாற்றம் செய்வதற்கு அரச வர்த்தகத் திணைக்களம் மற்றும் அதனுடன் திறைசேரியின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. **பணிப் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் அடைவ**

இலங்கை பொறியியற் பேரவை சட்ட மூலத்தின் 39(2) (உ) பிரிவில், பொறியியற் தொழிலர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் பயன்பாட்டு அனுபவம் கவனத்திற் கொண்டு சட்டமூலத்தின் கீழ் பதிவு செய்யும் பொறியியற் தொழிலர்களின் பல்வேறு வகுதிகளின் பணிப் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் அடைவுகள் நிச்சயமாகக் குறிப்பிடல் அத்தியாவசியமானதாகும்.

இலங்கைப் பொறியியற் பேரவையின் சட்டகத்தினுள் அதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு கொண்டு ஆரம்பத்தில் இருந்தே அதன் பணிப் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் அடைவுகளை வரைவிலக்கணப்படுத்தல் தொடர்பாக பேரவை தொடர்ந்து சம்பந்தப்படுகிறது.

இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் உடன்பாடு தொடர்பாக ஏற்கனவே சமர்ப்பித்த பல்வேறு வகுதிகள் தொடர்பாக நிலையான அளவுத் திட்டம் தயாரிப்பதற்கு காரணம் இந்த செயற்பாடுகள் தொடர்பாக பேரவையின் ஏற்கனவே நடந்த செயலமர்வுகளின் போது கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக சிரமமெடுத்தப் போதிலும் சவால்கள் காணப்பட்டமையால் அதனை வெற்றிகரமானதாக முடிப்பதற்கு முடியாமல் பொனது.

தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் இலங்கைக் கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் மற்றும் இரண்டு நிறவனங்களிலும் விசாரணைகளுக்கு ஒழுங்கு ஏற்படுத்தல் மற்றும் விளக்கமளித்தல் என்பவற்றை நொக்காகக் கொண்டு நான்கு விஷேட சபைக் கூட்டங்கள் கூடுதலின் மூலம் இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு 2023 வருடத்தில் ஒருமித்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இருப்பினும் இந்த அத்தியாவசிய தரங்கள் தொடர்பாக இறுதி தீர்விற்கு வருதல் தொடர்பாக பேரவையினுள் கடுமையான் கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று பிரசாரம் செய்வது தொடர்பாக இந்த தொழில் நிறுவனங்களில் விருப்பினைத் தெரிவிக்கும் ஏற்பு எதுவும் கிடைக்கவில்லை.

**05. அரசின் அனுகூலத் தன்மை**

**மேற்கொள்ளப்படும் தரங் கணிப்பிற்கு நிறுவன ரீதியான செயற்திட்டம்**

அரச வர்த்தக திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் தரங்கணிப்பிற்கு ஏற்ப பேரவை மூலம் நிறுவன ரீதியான செயற்திட்டம் பேரவையின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு இற்றைப் படுத்தப்பட்டு உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கே நிறுவன ரீதியான கீழ் குறிப்பிட்ட அறிக்கைகள் மூலம் நிறைவு பெறுகிறது.

வர்த்தகத் செயற்திட்டம், நிதி எதிர்வு கூறல் 2022 - 2026 முக்கியமான தரங் கணிப்பு காட்சி (KPIS) மற்றும் வரவு செலவு 2024.

**செயற்பாட்டுத் திட்டம் 2024**

செயற்பாட்டுத் திட்டம் தயாரித்து உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**செயற்பாட்டுத் திட்டம் 2023**

செயற்பாட்டுத் திட்டமிடலுக்கு ஏற்ப தேர்ச்சி பேரவையின் ஒவ்வொரு மாதாந்த கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**வரவு செலவு 2024**

வரவு செலவு தயாரிக்கப்பட்டு உரிய அதிகாரிகளுக்க அனுப்பப்பட்டுள்ளது.

**இருப்பு நிலைவரம் 2023**

2023 டிசெம்பர் 07 ஆம் திகதி இருப்பு நிலைவரம் எடுக்கப்படுகின்றது.

**வருடாந்த அறிக்கை**

2019 - 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவெற்றப்பட்டது. 2023 மே மாதம் 12ஆம் திகதி உணவு பாதுகாப்பு மற்றும் விவசாய குழுவின் போது கவனத்திற் கொள்ளப்பட்டது.

2020 - 2023 ஆகஸ்ட் 09ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவெற்றப்பட்டது. 2023 செப்டெம்பர் 22 ஆம் திகதி உணவு பாதுகாப்பு மற்றும் விவசாயம் தொடர்பான பிரிவு மேற்பார்வை குழுவின் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

2021 - 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

2022 - 2023 டிசெம்பர் 27 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது

2023 ஜனவரி 1 முதல் 2023 டிசெம்பர் 31 வரையான கால கட்டத்தில் இலங்கைப் பொறியியற் பேரவையின் 2 கணக்காய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2023 ஜனவரி 1 முதல் 2023 டிசெம்பர் 31 வரையான கால கட்டத்தில் 12 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**06. 2023 டிசெம்பர் 31 திகதிக்கு பொறியியற் தொழிலர்கள் பதிவு செய்தல் தேர்ச்சி**

- பட்டயப் பொறியியலாளர்கள் - 5,137
- அண்மித்த பொறியியலாளர்கள் - 8,821
- இணைப்புப் பொறியியலாளர்கள் - 88
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் - 487
- பொறியியல் டிப்ளோமாதாரிகள் - 1,577
- பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள் - 785
- வெளிநாட்டு பொறியியற் தொழிலர்கள் - 59

மொத்தம் - 16,954

# நிதிக் கூற்று

**இலங்கைப் பொறியியற் பேரவை**

**2023 டிசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக**

**நிதி தரங்கணிப்பு கூற்று**

| | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் | 1 | 19,596,000 | 18,434,000 |
| திறைசேரி வழங்கீடு | | - | 3,832,405 |
| வட்டி வருமானம் | 2 | 7,744,148 | 3,944,278 |
| மொத்த வருமானம் | | 27,340,148 | 26,210,683 |
| நிர்வாகச் செலவுகள் | 3 | (11,124,414) | (11,054,464) |
| ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவை மற்றும் பராமரிப்பு செலவுகள் | 4 | (2,165,077) | (1,074,337) |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 5 | (772,836) | (4,894,909) |
| தேய்வு | | (233,303) | (217,168) |
| மொத்த செலவுகள் | | (14,295,630) | (17,240,878) |
| செயற்பாட்டின் மேலதிகம் | | 13,044,518 | 8,969,805 |
| வரி | | (3,724,944) | (2,084,350) |
| ஒரு வருட காலத்திற்கான மேலதிகம் | | 9,319,574 | 6,885,455 |

**இலங்கைப் பொறியியற் பேரவை**

**2023 டிசெம்பர் 31 திகதியில்**

**நிதி தரங்கணிப்பு கூற்று**

**சொத்து**

| **நடைமுறை சொத்து** | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | 6 | 3,542,192 | 7,231,778 |
| குறுகிய கால முதலீடு | 7 | 43,000,000 | 30,000,000 |
| வியாபார வரவு வேறு வரவு மற்றும் ஆரம்ப கொடுப்பனவு | 8 | 6,533,123 | 4,407,510 |
| | | **53,075,315** | **41,639,288** |
| **நடைமுறை அல்லாச் சொத்து** | | | |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | 9 | 1,004,325 | 1,865,656 |
| மொத்த சொத்துக்கள் | | **54079640** | **43504944** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய ஒதுக்கங்கள் மற்றும் செலுத்த வேண்டியவை | 10 | **4,108,595** | **2,351,524** |
| **நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| இடைநிறுத்தப்பட்ட வருமானம்(அரச வழங்கீட்டிற்காக) | 11 | 523,355 | 1,151,383 |
| ஊழியர் பிரதிபலன் வழங்கல் | 12 | 126,079 | |
| | | **649,434** | **1,151,383** |
| மொத்த பொறுப்புக்கள் | | **4,758,029** | **3,502,907** |
| தேறிய சொத்து | | **49,321,611** | **40,002,037** |
| சம பங்குகள் | | | |
| மேலதிகங்கள் | | **49,321,611** | **40,002,037** |

கணக்கீட்டுக் கொள்கை மற்றும் 05 முதல் 07 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கப்பட்ட பகுதியொன்றாகும்.

போறியியற் பேரவையின் தற்போதைக்கு உள்ள அறிக்கைகளுக்கு ஏற்ப மேலே குறிப்பிடப்பட்ட நிதிக் கூற்று உண்மையானதும் பிழையற்றதும் என நான் உறுதிப்படுத்துகிறேன்

தம்மிக்க பண்டார

நிதி முகாமையாளர்

நிதிக் கூற்றைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக பேரவையின் அங்கத்தவர்கள் பொறுப்பேற்பார்கள். பொறியியற் பேரவைக்காக அனுமதிக்கப்படுகிறது.

தவிசாளர்
இலங்கைப் பொறியியற் பேரவை
2024 ஜனவரி 31

பேராசிரியர் உதேனி G.நவகமுவ
பேராசிரியர் திருமதி.W.B.M.தோரதெனிய
பேரவையின் அங்கத்துவம

**இலங்கைப் பொறியியற் பேரவை**

**நிதி தரங்கணிப்பு கூற்று தொடர்பான கூற்று**

**தேறிய சொத்து/சம பங்கு**

**2023 டிசெம்பர் 31 திகதிக்கு மாற்றங்களின் கூற்று**

| | பங்களிப்பு மூலதனம் | உடன்பட்ட இலாபம்/பாக்கி ரூபா | மொத்தம் |
|---|---|---|---|
| 2021 ஜனவரி 1ஆம் திகதியில் மீதி | - | 22,564,525 | 22,564,525 |
| வருடத்தின் மேலதிகம் மற்றும் மீதி | - | 10,552,057 | 10,552,057 |
| **2021 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் மீதி** | - | **33,116,582** | **33,116,582** |
| 2022 ஜனவரி 1ஆம் திகதியில் மீதி | - | 33,116,582 | 33,116,582 |
| வருடத்தின் மேலதிகம் மற்றும் மீதி | - | 6,885,455 | 6,885,455 |
| **2022 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் மீதி** | - | **40,002,037** | **40,002,037** |
| 2023 ஜனரி 1ஆம் திகதியில் மீதி | - | 40,002,037 | 40,002,037 |
| வருடத்தின் மேலதிகம் மற்றும் மீதி | - | 9,319,574 | 9,319,574 |
| **2023 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் மீதி** | - | **49,321,611** | **49321,611** |

**இலங்கைப் பொறியியற் பேரவை**

**நிதிப்புரள்வு கூற்று**

**2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக**

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **நடாத்திச் செல்லப்படும் செயற்பாடுகளின் நிதி மேலதிகம** | | |
| வருமனவரிக்கு முன்னர் ஆண்டின் மேலதிகம் | 13,044,518 | 8,969,805 |
| பொருத்தப்பாடுகள்:- | | |
| திறைசேரி வழங்கீடுகள்(மீண்டெழும்) | - | (3832405) |
| கிடைத்த வட்டி | (7,744,148) | (3,944,278) |
| தேய்மானம் | 233,303 | 217,168 |

| | | |
|---|---|---|
| ஊழியர் போனஸ் பகிர்வு | 126,079 | - |
| நிர்வாக மூலதனம் மாற்றத்திற்கு முன்பு நடாத்திச் சென்ற இலாபம் | **5,659,752** | **1,410,291** |
| ஏனையஒதுக்கங்கள் மற்றும் செலுத்த வேண்டிய செலவுகளின் மாற்றம் | 116,477 | (6,584) |
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை மற்றும் முன் கொடுத்தல் களின் மாற்றம் | (2,125,613) | (3,759,510) |
| நடாத்திச் செல்லும் செயற்பாடுகளின் நிதிப்புரள்வு | **3,650,616** | **(2,355,803)** |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (2,084,350) | (1,255,000) |
| நடாத்திச் செல்லும் செயற்பாடுகளின் தேறிய நிதிப்புரள்வு | **1,566,266** | **(3,610,803)** |
| முதலீட்டு செயற்பாடுகளில் பணப் புரள்வு | | |
| சொத்தாதிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | - | (170,100) |
| முதலீடு/குறுகிய கால வைப்புககளை அப்புறப்படுத்தல் | (13,000,000) | 926,000 |
| வட்டி வருமானம் | 7,744,144 | 3,944,277 |
| முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் பணப்புரள்வு | (5,255,852) | 4,700,177 |
| நிதிச் செயற்பாட்டின் மூலம் பணப்புரள்வு | | |
| கிடைத்த திறைசேரி வழங்கீடுகள்(மீண்டெழும்) | - | 3,832,405 |
| முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் தேறிய பணப்புரள்வு | - | 3,832,405 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமானமானவைகளின் தேறிய உயர்வு(குறைவு) | (3,689,586) | 4,921,778 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்திற்கு சமமான பணம் | 7,231,778 | 2,310,000 |
| வருட இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு சமமான பணம் | 3,542,192 | 7,231,778 |

பணப்புரள்வுக் கூற்றின் குறிப்புக்கள்

பணம் மற்றும் பணத்திற்கு சமமான வை வங்கி மீதிகளில் உள்ளடங்கும். பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை உட்பட நிதிப்புரள்வு கூற்றில் கீழ் குறிப்பிடப்படும் நிதி நிலைமை கூற்றுக்களில் உள்ளடங்கும்.

| | 2023 | 2022 |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| வங்கியுடனான நடைமுறைக் கணக்கு மற்றும் சேமிப்பு கணக்கு | **3:542,192** | **7,231,778** |

## 1. நிறுவனத் தகவல்கள்

### பொதுத் தகவல்கள்

2017 இலக்கம் 4 சட்டமூலத்தின் விதிமுறைகளின் கீ இலங்கைப் பொறியியற் பேரவை 2018 ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்டது.

### பிரதான செயற்பாடுகள் மற்றும் நடைமுறைப் படுத்தும் தன்மை

இலங்கைப் பொறியியற் பேரவை, பொறியியற் தொழிலர்களின் தொழிற் தரம் மற்றும் செயற்பாடுகளை நடாத்திச் செல்லல், பல்வேறு வகுதிகளில் பொறியியற் தொழிலர்கள் பதிவு செய்தல் மற்றும் அது தொடர்பான அல்லது அதற்கு பொருத்தமான விடயங்களை வழங்குதல் தொடர்பாக பொறுப்புக் கூறல் வேண்டும்.

### பேரவையின் பொறுப்புக் கூறல் கூற்று

இலங்கை அரச துறையில் கணக்கீட்டுத் தரங்களின் விதிமுறைகளுக்கு அமைவாக இந்த நிதிக் கூற்றைத் தயாரித்து சமர்ப்பித்தல் இலங்கை பொறியியற் பேரவையின் பொறுப்பாகும்.

### பதிவாளர் காரியாலயத்தின் முகவரி மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதான காரியாலயம்.

இலங்கைப் பொறியியற் பேரவை, 4ஆம் மாடி, நீர் வழங்கல் திணைக்கள வளாகம், 230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 அனுகூலம் தொடர்பான கூற்று

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பங்குபற்றுதலுடன் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அரச பிரிவு கணக்கீட்டு தரங்கள் தொடர்பான குழு மூலம் விதிக்கப்பட்ட இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLPAS) ஏற்ப இலங்கை பொரியியற் பேரவையின் நிதிக் கூற்றுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**(தொடர்பு:- 2013.10.02 திகதிய PED/03/2013 சுற்றறிக்கை)**

### 2.2 நிதிக் கூற்றைத் தயாரிக்கும் அடிப்படை

வரலாற்று நிதிக் கொள்கை அடிப்படையில் இந்த நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.3 கணக்கீடு அளவிடும் அடிப்படை

வரலாற்று கொள்கை அடிப்படையில் நிதிக் கூற்றுத் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்பார்க்க கூடிய எதிர்காலத்திற்காக நிறுவனத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமைத் தொடர்பாக முகாமைத்துவத்தின் மூலம் அளவீடு செய்யப்பட்டுள்ளதோடு, வியாபார நடவடிக்கைகளை நிறைவுருத்தல் அல்லது நிறுத்தும் தேவைப்பாடுகளை அவர்கள் எதிர்ப்பார்க்க மாட்டார்கள்.

### 2.4 செயற்பாடு மற்றும் சமர்ப்பித்தலின் நிதிப்புரள்வு.

பேரவையின் நிதிப்புரள்வு இலங்கை ரூபாவில் இந்த நிதிக் கொள்கை சமர்ப்பிக்கப்படுவதோடு, நிர்ணயித்தல் ஒன்றின் மூலம் நிலையாகக் காட்டப்பட்டுள்ளபோது அல்லாது அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ஆயிரத்திற்கு தரப்பட்டுள்ளது.

## 3. சொத்து மற்றும் அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி அடிப்படை

### 3.1 சொத்து விபரம் மற்றும் உபகரணங்கள்

சொத்து விபரம் மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் அறிக்கைப் படுத்தல் குறைந்த கூட்டுத் தேய்மானத்தின் மூலமாகும் சொத்து விபரம் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் எனப்படுவது கொள்வனவு/மீள் மதிப்பீடு செய்தலின் அல்லது நிர்மானத் தேய்வு மற்றும் அது தொடர்பான வேறு ஏதாவது துணைச் செலவாக கொள்ளப்படும்.

### 3.2 தேய்மானம்

உரிய சொத்துக்களில் பயன்தரு ஆயட்காலத்தில் சாதாரண தரமான சொத்து, விபரம் மற்றும் உபகரணங்கள்/தேய்மானத்தை கழித்து விட முடியுமாறு தேய்மானம் கணக்கிடப்படும். இது தொடர்பாகப் பயன்படுத்தப்படு:ம் பிரதான வருடாந்த கழிவு வீதம் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| மனைப் பொருட்கள் | 20% |
| கணணி உதிரிப்பாகங்கள் | 20% |
| காரியாலய உபகரணங்கள் | 20% |

### 3.3 வழங்கீடுகள்

திரைசேரி, சமாந்தர திணைக்களம் மற்றும் ஏனைய உரிய அரச செயற் திட்டங்களில் வழங்கீடுகளாகக் கிடைக்கும் சொத்து வருமான நுழைவின் கீழ் இனங்கண்டு கொள்ளப்படும். சொத்துக்களின் ஆயுட்காலம் முறையான அடிப்படை ஒன்றின் இடைநிறுத்தப்பட்ட வருமானம் (அரச வழங்கீடுகளுக்கு உரியதான) நிதித் தரங்கணிப்புக் கூற்றில் காணப்படும் தேய்வுக் கணக்கில் ஈடு செய்யப்படும்.

### 3.4 பொருட்பதிவேடு

பொருட்பதிவேடு கணக்கிடப்படுவது குறைமதிப்பீடு மற்றும் தேறிய இயல்புக் குறிகளில் ஆகும். FIFO செலவு அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்படுவதோடு, பொருட்பதிவேட்டை பொருப்பேற்கும் போது அவற்றின் தற்போதைய இடத்திற்கு மற்றும் நிலைமைக்கு கொண்டுவரும்போது ஏற்படும் செலவுகள் உட்படும்.

### 3.5 செலுத்தப்பட வேண்டிய பெறுமதி மற்றும் ஏற்படும் செலவினங்கள்

வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை செலவில் குறிப்பிடப்படும்.

### 3.6 கிடைக்க வேண்டிய பெறுமதி

மோசமான மற்றும் சந்தேகத்திற்கிடமானவற்றுக்காக ஒதுக்கங்களைக் குறைத்து உரிய பிரிவினரிடம் இருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி மற்றும் அறவிடப்பட வேண்டிய மதிப்பீட்டு செலவில் இனங்கண்டுகொள்ளப்படும்

### 3.7 ஒதுக்கங்கள்

